Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.336 /2023 Date:10.02.2026
Deposition of witness for prosecution: PW12 ( LW12)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.முருகன் | Village | போடி |
| Father/ Husband Name | தாசைய்யா | Taluk | போடி |
| Age | 59 /2026 | Calling | காவல் துணை கண்காணிப்பாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 10.02.2026 TIME 12.55 **PM**

4-வது எதிரி இறந்துவிட்டார் . மற்ற எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது போடிநாயக்கனூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2013-ம் வருடம் தேனி மாவட்ட நிலஅபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, சார்பு ஆய்வாளர் திருமதி. ராமலட்சுமி பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்ற எண். 34/2013 இதச பிரிவு 420, 465, 468, 471, 506(2), 120 B வழக்கை முதல் விசாரணை செய்து, மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் ராசாத்தி, தவமணி, அழகுபாண்டி, தெய்வம், பாண்டியன் ஆகியோரை விசாரணை செய்ததில் அவர்கள் சார்பு ஆய்வாளர் அவர்களிடம் கூறிய விபரங்களை என்னிடம் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை, பின்னர் 08.10.2013-ம் தேதி சாட்சிகள் நல்லதம்பி, குருசாமி ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.10.2013-ம் தேதி சாட்சி பிச்சைமுனியாண்டி என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 27.11.2013-ம் தேதி இவ்வழக்கில் தேவராஜ் என்பவர் முத்துராஜ் என்பவருக்கு விற்பனை செய்ததாக தயார் செய்யப்பட்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தின் முத்திரை தாள் விபரம் குறித்து மாவட்ட பதிவாளர் பெரியகுளம் அவர்களுக்கு வேண்டுக்கோள் கடிதம் கொடுத்தேன். மேற்படி முத்திரை தாள் விபரத்தை மாவட்ட பதிவாளர் பெரியகுளம் அவர்களது அலுவலகத்தில் இருந்து அதன் மேலாளர் திருமதி. மீனா என்பவரிடம் இருந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி விபரத்தை பெற்றேன். 06.12.2013-ம் தேதி இவ்வழக்கின் எதிரி முத்துராஜ் என்பவரும் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது எனது விசாரணையில் தெரியவந்ததால் அவரை எதிரியாக சேர்த்து அறிக்கை தயார் செய்தேன். எதிரி சேர்த்தல் அறிக்கை **அ.சா.ஆ.10** ஆகும். 25.12.2013-ம் தேதி இவ்வழக்கு ஆவண எண் 2354/73, 576/IV/2003, 227/2011 ஆகிய ஆவணங்களின் சான்றிட்ட நகல் வழங்குமாறு கம்பம் சார் பதிவாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் விடுத்தேன். 31.12.2013-ம் தேதி மேற்படி ஆவணங்களின் சான்றிட்ட நகல் வழங்கிய கம்பம் சார் பதிவாளர் திரு.ராதகிருஷ்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, நகல்கள் பெற்றேன். இத்துடன் எனது விசாரணையை முடித்து வழக்கு கோப்பை எனக்கு பின்னால் வந்த ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.